

# TWENTY SECOND ANNUAL CONFERENCE & INTERNATIONAL SEMINAR - 2017

## ON
## " PERSONAL FREEDOM, CULTURAL PRACTICES, GLOBAL GOVERNANCE, AND PEACEFUL CO-EXISTANCE"

(28th, 29th, and 30th November 2017)

**FACULTY OF ARTS - UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**

COLLABORATION WITH

**ASSOCIATION OF THIRD WORLD STUDIES**
**SOUTH ASIA CHAPTER**
**(ATWS-SAC)**

# திருநாவுக்கரசுநாயனார் தேவாரங்கள் புலப்படுத்தும் இன்பநலக் கோட்பாட்டுச் சிந்தனைகள் - ஒரு நோக்கு

**சி. ரமணராஜா, விரிவுரையாளர்,**

இந்துநாகரிகத்துறை,யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

**ஆய்வுச் சுருக்கம்**

சமூகஉளவியலாளர்களால் முன்வைக்கப்பட்டிருக்கின்ற சமூக உளவியல் கருத்துக் கோட்பாடுகளுள் இன்பநலக் கோட்பாடென்பதும் ஒன்றாகும். இக்கொள்கைபலவகைப் படிநிலைகளூடாகமலர்ச்சிகண்டுபயன்முதற்கொள்கைஎனவளம்பெற்றுநின்றது. இன்பம் தான் வாழ்வின் குறிக்கோள் என்றசிந்தனையைவலியுறுத்தும் கொள்கை இதுவாகும். மிகப்பெரும்பாலானவர்களுக்குக் கிடைக்கக் கூடியஅளவிலாதஇன்பம்தரும்செயலைச்செய்தலேஅறவியற்குறிக்கோளாகுமெனஇக்கோட்பாட்டாளர்கள் விளக்கினர். இன்பம் தான் வாழ்வின் குறிக்கோள் எனநவீனசமூகஉளவியலாளர்கள் எடுத்தாளும் நிலையில், இந்துக்களின் அறஇயற்கொள்கையானதுஅறம்,பொருள்,இன்பம்,வீடுஎனநான்குஉறுதிப் பொருட்களைகுறிக்கோளாகவிளக்கிநிற்கின்றது.பொருள், இன்பம் முதலியனஅறத்தைநாடவும்,அறம் வீட்டின்பத்தைஅளிக்கவும் பயன்படுவன. இக்குறிக்கோள்களைநோக்கியதானசெயற்கரும் செயல்களேஅறக்கடமைகளாகஎடுத்தாளப்படுகின்றன. பௌதீகஅதீதஎல்லையைக் கடந்துஅப்பாலாயுள்ள இறைவனையும்,அவ்விறைவன் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்களையும் முன்னிறுத்திகாலந்தோறும்இந்துசமயப் புலத்தில் அக்கடமைகள் பிரசாரிக்கப்பட்டுவந்தன. அறவாழ்வின் மூலம் பெறும் இன்பம் பேரின்பத்திற்கு இட்டுச் செல்லும் என்றநம்பிக்கைமக்கள் மயப்பட்டிருந்தது. பக்திஎன்னும் சாதனத்தை அடிப்படையாகக் கொண்டுசெயற்பட்டபல்லவர் காலத்துசமூக இயக்கச் செயற்பாட்டாளார்களில்ஒருவரானநாவுக்கரசர்சைவசமூகக்கட்டமைப்பினைஉருவாக்குவதற்குஎத்தனம் செய்தவர். இவ்எத்தனிப்புக்களுக்கானசிந்தனைகளைஅவரதுபடைப்புக்களானதேவாரங்களில் இனங்காணலாம். சமய,தத்துவக் கருத்துக்களைமட்டுமன்றிஅறிவியற் சிந்தனைகளையும் தேவாரப் பதிகங்கள் பொருண்மையாகக் கொண்டுள்ளன.இந்தியமெய்யியல் பரப்புடன் இணைந்ததாகவேஉளவியலும் காலந்தோறும் வளம்பெற்றுவந்தது.இந்தியஉளவியலில் தனிமனிதனைமையமாகக் கொண்டகருத்தியல் சிந்தனைகள் காணப்படினும்,பொதுவானநோக்கம் இருப்பதனையும்,சுயவிழிப்புணர்வைமையப்படுத்தியதாகஇச்சிந்தனைகள்உருவாக்கப்பட்டமையையும் காணவியலும். அதேவேளைசிலபொதுவானகொள்கைகள் வாழ்க்கையைஉரியமுறையில் வாழ்ந்துமகிழ்ச்சியைத் தேடிக்கண்டறிய உருவாக்கப்பட்டதுடன் இந்தியஉளவியல் ஒவ்வொன்றும் தனித்தன்மையதாகவும் உள்ளது. அதன் உண்மையானநோக்கம் ‘மனம்’ என்பதைப் பற்றிஆராய்வதுமட்டுமல்ல. அதனைவிருத்திசெய்துநடத்தை(Behavior)மற்றும் ஆளுமையோடு (personality) இணைப்பதுமாகும்.இம்மனம் பற்றியகருத்தியல்களின் நகர்வுக்கும், நடத்தைக் கோலங்களின்விருத்திக்கும்,முறையானவாழ்வியலூடானஇன்பத்திற்கும்நாவுக்கரசரின் சிந்தனைகள் ஆக்கபூர்வமானவையாகஉள்ளன. ஆன்மிக இன்பம்சார் சிந்தனைகளை இனங்கண்டுநோக்குவதே இவ்வாய்வின் பிரதான இலக்காகும். சமயம் சார் அடிப்படையிலும்,சமூகஉளவியல் அடிப்படையிலும் இந்தஆய்வுநிகழ்த்தப்படுவதனால் இலக்கியவிபரணஆய்வுமுறையியலையும்,ஆய்வினது இலகுதன்மைக்காகஉள்ளடக்கப் பகுப்பாய்வுமுறையியலையும் பின்பற்றிச் செல்கிறது.திருநாவுக்கரசரின் தேவாரங்களைஆய்வுப்பகுதியாகவும்,அந்நூலிலுள்ள இன்பவியற் சிந்தனைகளைவரையறையாகவும் கொண்டு இவ்வாய்வுநிகழ்த்தப்படுகின்றது.

**திறவுச்சொற்கள் :** திருநாவுக்கரசுநாயனார்,தேவாரங்கள்,இன்பநலக்காட்பாடு,மனிதநடத்தை,ஆன்மிக இன்பம்,வாழ்வின் குறியிலக்கு.